**கண்டி மாநகர சபை சட்டப் பிரிவுக்காக சேவை கொள்வனவு செய்தல் முறையின் அடிப்படையில் சட்டம் சார்ந்த சேவையினைப் பெற்றுக் கொள்ளல்**

கண்டி மாநகர சபையின் சேவைத் தேவைப்பாட்டுக்கு அமைய சேவையினைக் கொள்வனவு செய்தல் அடிப்படையில் சட்ட உத்தியோகத்தர் பணினைப் புரிவதற்கானக உரிய தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோப்படுகின்றன. அதன் படி விண்ணப்பம் இடப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சேவையின் பெயர் குறிப்பிடப்பட்டு 2025.04.21 ஆம் திகதிக்கு முன்னர் நகர ஆணையாளர், கண்டி மாநகர சபை. கண்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

1. கொள்வனவு செய்தற்காக உள்ள சேவை. கண்டி மாநகர சபையின் சட்டம் சார்ந்த பணிகளை மேற் கொள்வதற்காக சேவை கொள்வனவு செய்தல் முறையின் அடிப்படையில் சேவையினைப் பெற்றுக் கொள்ளல்

2. மாதாந்த கொடுப்பனவு : மாதாந்த கொடுப்பனவு 97915/= ஆகும் (21 நாட்கள் பணியாற்றுதற்காக)

3. உடலியல்த் தகைமைகள் : குறித்த சேவையினை வழங்குவதற்குப் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

4. கல்வித் தகைமைகள் : இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது சட்டக் கல்லூரியில் சட்டம் குறித்த பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

5. தொழில் தகைமைகள் : உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமானம் செய்த பின்னர் மூன்று (03) வருடங்கள் தொடரான தொடரான தொழில் அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது.

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமானம் செய்த பிறகு, அரச நிறுவனம் ஒன்றில் கீழ்க் குறிப்பிடுகின்ற கருமங்களில் குறைந்தது மூன்று (03) வருடங்கள் அனுபவம் பெற்றிருக்க :

I. வழக்குகள் தொடர்பில் சட்ட விவகாரங்கள் மற்றும் சட்டமா அதிபருடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கையில் ஈடுபடல்.

II. ஒப்பந்தங்களுடன் தொடர்பான சட்ட நடிவடிக்கைகள்.

III. குறித்த கட்டளைச் சட்டங்கள் தொடர்பான சட்ட நடிவடிக்கைகள்.

IV. சட்ட முனமொழிவுகள், சுற்றுநிருபங்கள், விதிமுறைக் போன்ற சட்ட ரீதியான ஆவணங்கள் தயாரித்தல்.

V. பல்வேறு சட்டரீதியான நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சட்டம் அல்லது நீதிமன்றச் செயற்பாடுகள் அல்லது பரிதோதனை நடவடிக்கைகள் மேற்கொண்டிருத்தல்.

6. ஏனைய தகைமைகள் : (I) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல்

(ii) நியமனம் வழங்குவதற்கான தகைமைகள் அனைத்தும் விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

7. வயது : அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பம் ஏற்கப்படும் திகதிதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 55 வயதிலும் அதிகரிக்காமலும் இருக்க வேண்டும்.

8. தெரிவு செய்யப்படுகின்ற முறை : தகைமைகளைப் பூர்த்திசெய்கின்றவர்கள் கீழ்க்கு குறிப்பிடப்படும் நுபந்தகைகளுக்கு அமைய சேவைக்காகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீசையில் பெறுகின்ற புள்ளிகளுக்கு அமைய முன்னுரிமை அடிப்படையில் 01 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீசையில் அதிக புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்.

9. சேவை நிபந்தனைகள்

- நியமனம் வழங்கப்படுகின்ற தினத்திலிருந்து 06 மாதங்கள் சேவைக் காலமாகும். சேவையின் தேவை அடிப்படையில் சேவைக் காலத்தை அதிகரிப்பதற்கு நகர ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும்.
- எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சேவையை முடிவுக்குக் கொண்டுவர நகர ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு/
- தெரிவு செய்யப்பட்டவர்கள் சேவையிலிருந்து நீங்கிக் கொள்வதாயின் ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.
- இந்த நியமனம் வழங்கப்படுவது சேவையின் அவசியப்பாடு காரணமாக மாத்திரம் என்பதுடன் இவேறு அரச பதவி ஒன்றினைப் பெறுவதற்கான உரிமை ஒன்றாக அமையாது.
- தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளருடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவெண்டும்.

குறிப்பு - இந்த சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கண்டி மாநகர சபையின் www.kandy.mc.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பம் பெறப்படும் இறுதித்திகதிக்கு அனைத்து அவசியமான தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன் சேவை பெறுதல் குறித்த இறுதித் தீர்மானம் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் கோரப்பட்ட பின்னரோ அல்லது விண்ணப்பம் கோரப்படுகின்ற காலத்திலோ இந்த நியமனம் வழங்குதலை தாமதப்படுத்துவதற்கு, மாற்றுவதற்கு, இந்த அறிவித்லை இரத்துச் செய்வதற்கு, இந்த அறிவித்தலைத் திருத்தியமைப்பதற்கு என பூரண அதிகாரம் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளருக்கு உண்டு.

ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்க.
நகர ஆணையாளர்
கண்டி மாநகர சபை

2025.03.28